***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 26/2021 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | **ராஜாராம்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 01.07.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் பாவூர்சத்திரத்தில் உள்ள சாமி உமையாள் டிரேடர்ஸ்ல் உதவி கணக்குபிள்ளையாக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளான வேல்முருகன், பலவேசமுத்து ஆகியோர்களை எனக்கு தெரியும். 3ம் எதிரி சக்திகுமாரை தெரியும். பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். எங்கள் குடோனில் 1வதுஎதிரி வேல்முருகன் வாட்ச்மேனாக வேலை பார்த்தார். 2வது எதிரி பலவேசமுத்து ஆட்டோ டிரைவர், 3வது எதிரி சக்திகுமார் சுரண்டையில் கடை வைத்திருக்கிறார். அசா.1 குத்தாலிங்கம் என்பவரை எனக்கு தெரியும். எங்கள் குடோனின் கணக்குபிள்ளை. 03.06.2020ம் தேதி இரவு 9 மணிக்கு 1வது எதிரி வேல்முருகனிடம் மல்லி, வத்தல் மூடைகள் குடோனில் இருப்பதாக சொல்லி விட்டு சென்றோம். 04.06.2020ல் காலை 7மணிக்கு வந்து மூடையை எண்ணும் போது 9மல்லி மூடை, 6வத்தல் மூடைகுறைந்திருந்தது. அதன் பின் ஓனரிடம் சொல்லிவிட்டு வாட்ச்மேனை தேடி நானும், அசா.1ம் வாட்ச்மேன்

வீட்டிற்கு சென்றோம். செல்லும் வழியில் கொண்டலூர் புளியமரத்துக்கு அடியில் அபே ஆட்டோ TN 72 AV 2103 பதிவெண் கொண்ட ஆட்டோவில் எதிரிகள் மூவரும் 9 மல்லிமூடைகள் மற்றும் 6 வத்தல் மூடைகளுடன் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் நாங்கள் விசாரித்த போது 3 வது எதிரி சக்திகுமாரின் கடைக்கு மூடைகளை கொண்டு செல்வதாக எதிரிகள் கூறினார்கள்.

வத்தல் மற்றும் மல்லி மூடைகளின்மதிப்பு ரூ.57000. பின்னர் நாங்கள் முதலாளிக்கு தகவல் சொல்லி விட்டு காவல்நிலையம் நானும், அசா.1 ம் சென்று புகார் கொடுத்தோம். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 26/2021 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | **குத்தாலிங்கம்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 01.07.2025.

**முதல் விசாரணை**

**நான் தற்போது ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் பாவூர்சத்திரத்தில் உள்ள பாஸ்கர் வத்தல் குடோனில் கணக்குபிள்ளையாக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளான வேல்முருகன், பலவேசமுத்து ஆகியோர்களை எனக்கு தெரியும். 3ம் எதிரி சக்திகுமாரை தெரியும். பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். 1வதுஎதிரி வேல்முருகன் மேற்சொன்ன குடோனில் வாட்ச்மேனாக வேலை பார்த்தார். பலவேசமுத்து ஆட்டோ வைத்திருந்தார். சக்திகுமார் கடை வைத்துள்ளார். 3.6.2020 அன்று எஸ்பி பாஸ்கர் சாமி உமையாள் டிரேடர்ஸ் குடோனில் வத்தல் மற்றும் மல்லி இருப்பு குறைந்தது. பின்னர் கடை உரிமையாளரிடம் தெரிவித்தேன். இரவு 9 மணிக்கு 1வது எதிரி கடைக்கு வந்ததும் அவரிடம் தெரிவித்து விட்டு சென்று விட்டேன். மறுநாள் காலை 7 மணிக்கு குடோனில் வந்து பார்த்த போது 9 மூடை மல்லியும், 6 மூடை வத்தலும் குறைந்திருந்தது. பின்னர் ஓனருக்கு தகவல் தெரிவித்தேன். 1வது எதிரியான வாட்ச்மேனை தேடி நானும், எனக்கு உதவியாளராக இருந்த**

ராஜாராம் லெட்சுமிபட்டிக்கு தேடி சென்ற போது கொண்டலூரின் அருகே எதிரிகள் மூவரும் 9 மூடை மல்லியையும், 6 மூடை வத்தலையும் பிரித்து பங்கு வைத்து கொண்டிருந்தார்கள். வண்டி எண் TN 72 AV 2301 என்ற பதிவெண் கொண்ட அபே ஆட்டோவில் பங்கு பிரித்து வைத்திருந்தார்கள். நான் ஓனரிடம் தகவல் தெரிவித்தேன். நான் எதிரிகளிடம் கேட்ட போது மூடைகள் எங்கள் குடோனில் இருந்து எடுத்தது தான் என கூறினார்கள். அந்த எடுத்த மூடையை சுரண்டையில் உள்ள 3 வது எதிரி சக்திகுமார் என்பவரது கடைக்கு எடுத்து செல்வதாக கூறினார்கள். பின்னர் நாங்கள் எதிரிகளையும், அபே ஆட்டோ மற்றும் வத்தல் மல்லி சாக்குமூடையுடன் பாவூர்சத்திரம் காவல்நிலையத்திற்கு சென்றோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி என்னிடம் காட்டப்படும் படிவம் 91ல் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்தை நான் பொருட்களை காவல்நிலையத்தில் ஒப்படைத்ததற்காக என்னிடம் வாங்கினார்கள் படிவம் 91ல் உள்ள சாட்சி கையெழுத்து அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வத்தல் மல்லி உள்ள சாக்குமூட்டைகள் எங்கள் குடோனில் திருடு போனது தான் அதை நாங்கள் நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொண்டோம். பெற்றுக் கொண்ட வத்தல் மல்லி மூடைகளை நான் குடோனில் ஒப்படைத்து விட்டேன். திருடு போன வத்தல், மல்லி மூடைகளின் மதிப்பு ரூ.54000 இருக்கும். மேற்படி வத்தல் மல்லி மூடைகள் இருந்த புகைப்படம் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi